## யூன் – 14 - புதன்

**புனித முதலாவது மெத்தாடியுஸ்**

**“திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம்: அவற்றை அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்”. மத். 5:17**

### முதல் வாசகம் : 2 கொரிந்தியர் : 3 : 4 – 11

சகோதர சகோதரிகளே! கிறிஸ்துவின் வழியாய் நாங்கள் கடவுள்மேல் வைத்துள்ள உறுதியான நம்பிக்கையால்தான் இவ்வாறு சொல்லுகிறோம். நாங்களே செய்ததாக எதன் மேலும் உரிமைபாராட்டிக் கொள்ள எங்களுக்குத் தகுதி இல்லை. எங்கள் தகுதி கடவுளிடமிருந்தே வருகிறது. அவரே புதிய உடன் படிக்கையின் பணியாளராகும் தகுதியை எங்களுக்குத் தந்தார். அவ்வுடன்படிக்கை, எழுதப்பட்ட சட்டத்தைச் சார்ந்ததல்ல் தூய ஆவியையே சார்ந்தது. ஏனெனில் எழுதப்பட்ட சட்டத்தால் விளைவது சாவு் தூய ஆவியால் விளைவது வாழ்வு. கற்களில் பொறிக்கப்பட்ட அச்சட்டம் சார்ந்த திருப்பணி சாவை விளைவிப்பதாயிருந்தும் அது மாட்சியுடன் அருளப்பட்டது. விரைவில் மறையவேண்டியதாயிருந்த அம்மாட்சி மோசேயின் முகத்தில் இஸ்ரயேல் மக்கள் பார்க்க முடியாத அளவுக்கு ஒளிவீசியது. அதுவே அப்படியிருந்தது என்றால் தூய ஆவிசார்ந்த திருப்பணி எத்துணை மாட்சி பொருந்தியதாயிருக்கும்! தண்டனைத் தீர்ப்பு அளிக்கும் திருப்பணியே இத்துணை மாட்சி பொருந்திய தாயிருந்தது என்றால் விடுதலைத் தீர்ப்பு அளிக்கும் திருப்பணி எத்துணை மாட்சி நிறைந்ததாயிருக்கும்! அன்றைய மாட்சியை ஒப்புயர்வற்ற இன்றைய மாட்சியோடு ஒப்பிட்டால் அது மாட்சியே அல்ல. மறையப்போவது மாட்சி உடையதாயிருந்தால் நிலையாக இருப்பது எத்துணை மாட்சி மிகுந்ததாயிருக்கும்!

**பதில்பாடல் :** நம் கடவுளாகிய ஆண்டவரே தூயவர்

### நற்செய்தி : மத்தேயு 5 : 17 – 19

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: ”திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ணவேண்டாம் அவற்றை அழிப்பதற் கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். ”விண்ணும் மண்ணும் ஒழிந்து போகு முன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒருபுள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். எனவே, இக்கட்டளை களில் மிகச்சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் எனக் கருதப்படுவார். இவை அனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார“ என்றார்.

**தியானம்:** அன்று சீனாய் மலையில் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட பத்துக் கட்டளைகள் எத்துணை மாட்சிமை வாய்ந்ததாக இருந்ததென்பதை இன்றைய முதல் வாசகம் நமக்கு விளக்குகின்றது. அதைப் பெற்றுக்கொண்ட மோசேயின் முகம் இஸ்ராயேல் மக்கள் பார்க்க முடியாத அளவுக்கு பிரகாசமாய் ஒளிவீசியது. ஆனால், அத்திருச்சட்டங்கள் கால ஓட்டத்தில் குரங்கின் கைப் பூமாலையாக மாறியது. அச்சட்டங்களின் மேல் வரிச்சட்டமாக இருக்கவேண்டிய ‘அன்பு’ மறைந்து போனது. தலைவர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள், அதைத் தமக்குச் சாதகமாக்கி அதையே தமது வாழ்வாதாரமாக்கிப் பிழைப்பு நடாத்தி வந்தனர். அத் திருச்சட்டங்களை அவர்கள் கையிலிருந்து மீட்டு, தமது சொந்த இரத்தம் எனும் மை கொண்டு, ‘அன்பு’ எனும் மொழியால் அவற்றிற்குப் புத்துயிர் கொடுத்தார். கடந்த பல நூற்றாண்டுகளாக ‘மக்கள் ஆட்சி’ அல்லது ‘ஜனநாயகம்’ என்று அழைக்கப்பட்ட நாடுகளிலெல்லாம் அந்நாடுகளின் சட்டங்களாக கொலை, களவு, விபச்சாரம் போன்றவற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்து வந்ததும் இத்திருச்சட்டங்களின் கூறுகள்தாமே. ஆனால், எங்கெல்லாம், எப்போதெல்லாம் அன்புக்கு அடிபணியாமல், அதிகாரத்துக்குச் சட்டதிட்டங்கள் அடிபணிபணிகின்றனவோ அங்கெல்லாம் அவை அசிங்கப் படுத்தப்படுகின்றன. கருச்சிதைவு, மணமுறிவு, ஓர்பால் திருமணங்கள், போதை வஸ்துக்கள் சட்டப்படி அனுமதிக்கப்படுதல் போன்ற பல விடயங்களை சட்டத்திருத்தம் என்ற பெயரில் பல நாடுகள் அனுமதித்தாலும், ஆண்டவர் இயேசுவின் அன்புப் பாதையிலே நிலைத்து நிற்போமாக!